[1975 மார்ச் 25

உமியை எரிபொருளாகக் கொண்டு நெல் உலர்த்தல்

* 455 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உமியைக் கொண்டு நெல்லை உலர்த்தும் புதுமுறையை தமிழ் நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பரீட்சார்த்தமாக நடத்திப் பார்த்ததா ?

(இ) ஆமெனில், சோதனையின் முடிவு யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ&இ) திருவாரூரில் உள்ள நெல் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் கருத்து தெரிவித்த வடிவமைப்பு குறிப்பீடுகளின் அடிப்படையில் திருவாளர்கள் ஷாவாலஸ் நிறுவனம் தயாரித்துள்ள உமியை எரிபொருளாகப் பயன்படுத்தி நெல்லை உலர்த்தும் இயந்திர வடிவ மாதிரி ஒன்று நெல் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வும் சோதனையும் செய்யப்பட்டு வருகின்றது. இதன் செயல் முறையின் அடிப்படையில் மேற்கொண்டும் மாறுதல்கள் செய்யப்படலாம். அந்த மாறுதல்கள் அடிப்படையில் அதன் செயல் முறை மேற்கொண்டும் பரிசீலிக்கப்படும். அதன் பின்னர் தான் இந்த இயந்திரம் நல்ல முறையில் செயல்பட இயலுமா என்பது பற்றி முடிவு செய்ய இயலும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் அதிகமான இடங்களில் எஃப்.சி.ஐ. மூலமாக நெல் உலர்த்தும் ஆலைகளிருக்கின்றனவே, அவ்வாலைகளை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உபயோகிக்க இப்பொழுது வாய்ப்பிருக்கிறதா ? இல்லையானால், அவற்றினை உபயோகப்படுத்த அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது தனிக் கேள்வி. தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த உமியானது தவிடாக் கப்பட்டு, மாடுகளுக்குத் தீவனமாக இருக்கிறது. இப்பொழுது மாட்டுத் தீவனத்துக்கு மிகவும் பற்றாக்குறை இருக்கிற சூழ்நிலையிலே, உமியை எரிபொருளாக்குவது நல்லதல்ல. உமிக்கு பதிலாக, வேறு பொருளை அரசாங்கம் எரிக்க எற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவர் சொல்லுவதை (உமியை) உணவாகப் பயன்படுத்த முடியாது, மாடும் தின்ன முடியாது. உமியை வேறு எந்த உணவுப் பொருளாகவும் பயன்படுத்த முடியாது. சாதாரணமாக, குடும்பங்களிலே, உமியை அடுப்பு எரிக்கத்தான் பயன்படுத்துவார்கள். ஆகவே, இயந்திரங்களுக்குப் பயன்படுத்தலாம்.